# சிரேஸ்ட இடைநிலைமாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் சுயகற்றலின் முக்கியத்துவம்.(மட்/மண்முனை வடக்கு கோட்ட 1Cபோடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு)

## Importance of Self- Learning in the Learning Development of Senior Secondary Students (A survey research based on Manmunai north division's schools)

Miss.P.Mathumitha[1], Mrs.R.Thakshaayini[2]

[2]*Senior Lecturer in Education,*

[1,2]*Department of Education and Childcare,*

*Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.*

**Abstract -** *Self-learning activities of the students play a major role in their learning development. Nevertheless, we cannot find the same interest of self-learning in all the students. Hence, this survey research aims to explore the importance of self learning in the learning development of senior secondary students and provide findings and recommendations. According to the convenience sampling, four schools were selected from the schools in Manmunai north division of Batticaloa education zone and four of their respective principals were selected for this study without sample selection. According to the simple random sampling, 90 senior secondary students were selected in a 4:1 ratio, and 37 teachers in a 3:1 ratio, and 22 of the parents of the selected students in a 4:1 ratio. Data were obtained from who was selected for samples using research tools such as Questionnaire, interview and observation. All the data thus obtained are quantitatively and qualitatively analyzed and shown in the form of charts and tables. Microsoft Excel utilized for this. The findings shown that Self-learning involvement of the students is on the low level, No proper facility of Library for self-learning in the schools, The students give more importance to hobbies than self-learning, The contribution of homely atmosphere is very poor for self-learning, Decreased self-learning of the students lead to a setback in their education, and Reading practice or habit is very poor among the students. The Recommendations are Students need to be involved to start self-learning from the primary education, Schools need to make effective measures for self-learning, Parents and teachers must support and encourage the students for self-learning and Reading habit of the students must be enhanced.*

**Key words -** *Senior secondary students, learning development, Self-learning.*

**ஆய்வுச் சுருக்கம்**

*மாணவர்களுடையகற்றல் மேம்பாடடைவதற்கு அவர்களுடையசுயகற்றல் செயற்பாடுகள் முக்கியபங்காற்றுகின்றன. ஆயினும் அனைத்துமாணவர்களிடமும் சுயகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஈடுபாடுஒரேதன்மையாகக் காணப்படுவதில்லை. இதனால் சிரேஸ்ட இடைநிலைப் பிரிவுமாணவர்களின் சுயகற்றல் அவர்களதுகற்றல் மேம்பாட்டில் பெறும் முக்கியத்துவத்தைக் ஆராய்ந்து முடிவுகளையும் உரிய விதப்புரைகளையும் முன்வைக்கும் நோக்கில் இவ் அளவைநிலை*

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

*ஆய்வு அமைகிறது. இவ்வாய்வு மட்டக்களப்புகல்விவலயத்தின் மண்முனைவடக்குகோட்டத்திலுள்ளபாடசாலைகளிலிருந்துவசதிமாதிரியின் அடிப்படையில் நான்குபாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு, அப் பாடசாலைகளிலிருந்துஅதிபர்கள் நால்வரும் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்டதோடு இலகுஎழுமாற்றுமாதிரியின் அடிப்படையில் 4:1 எனும் விகிதத்தில் 90 சிரேஸ்ட இடைநிலைமாணவர்களும் 3:1 எனும் விகிதத்தில் 37 ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்ட 90 மாணவர்களின் பெற்றோரில் இலகுஎழுமாற்றுமாதிரியின் படி 4:1 எனும் விகிதத்தில் 22 பேரும் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டுஅவர்களிடமிருந்துவினாக்கொத்து,நேர்காணல், அவதானம் போன்றஆய்வுக் கருவிகளைப் பயன்படுத்திதரவுகள் பெறப்பட்டன. இவ்வாறுபெறப்பட்டதரவுகள் யாவும் அளவுரீதியாகவும் பண்புரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபுகள் வாயிலாக காட்டப்பட்டுள்ளன. இதற்காகMicrosoft Excelபயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் மாணவர்களுடையசுயகற்றல் ஈடுபாடுகுறைவாகக் காணப்படுகின்றது,பாடசாலையில் சுயகற்றலுக்கான நூலகவசதிகுறைவாகவுள்ளது, மாணவர்கள் சுயகற்றலை விட பொழுதுபோக்கு விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றனர்,மாணவர்களின் சுயகற்றலுக்குவீட்டுச் சூழலின் பங்களிப்புகுறைவாகவுள்ளது,மாணவர்களின் சுயகற்றல் குறையும் போது கல்வியில் பின்தங்கும் நிலை ஏற்படுகின்றது,மாணவர்களிடம் வாசிப்புச் செயற்பாடு குறைவாகவுள்ளது போன்ற முடிவுகளைக் கண்டறிந்ததோடு மாணவர்களை ஆரம்பக் கல்விமுதலாகசுயகற்றலில் ஈடுபடச்செய்யவேண்டும்,சுயகற்றலுக்காகபாடசாலைவினைத்திறனானநடவடிக்கைகளை செய்யவேண்டும், மாணவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதற்கான ஊக்குவிப்புக்களை ஆசிரியரும் பெற்றோரும் வழங்க வேண்டும்,மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தைஅதிகரிக்கவேண்டும் எனும் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.*

**திறவுச் சொற்கள்**

*சிரேஸ்ட இடைநிலை மாணவர்கள், கற்றல் மேம்பாடு, சுயகற்றல்.*

## 1.0 அறிமுகம்

### 1.1 ஆய்வு அறிமுகம்

இன்றைய காலப்பகுதியில் இவ்வுலக மாற்றத்தோடு இணைந்து வாழ, எதிர்காலத்தை செம்மைப்படுத்த சுயகற்றல் இன்றியமையாததாகின்றது. மாணவர்களுடைய பாடசாலைச் சூழலும், வீட்டுச் சூழலும் மாணவர்கள் சுயகற்றலை மேற்கொண்டு கற்றல் மேம்பாட்டைப் பெறுவதில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. மாணவர்களிடம் சுயகற்றலின் முக்கியத்துவத்தை உணரச் செய்வதில் ஆசிரியர்கள் தொடக்கம் முழுக் கல்விச் சமூகமும் பொறுப்புடையதாகவே இருக்க வேண்டும். ஆயினும் இன்று மண்முனை வடக்கு கோட்டத்தில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள் சுயகற்றலின் முக்கியத்துவத்தை உணர்த்தி, ஊக்குவிப்பது திருப்தியின்றி உள்ளமையினையும் மாணவர்களின் மத்தியில் சுயகற்றல் எனும் எண்ணக்கரு தளர்வடைந்து செல்வதையும் ஆசிரியர்களின் கருத்துக்கள், அண்மைக்கால கல்விப் போக்குகள், ஆய்வுக் கட்டுரைகள்,மற்றும் அவதானம் வாயிலாகக்அறியக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக வாசிப்புத்திறனில் இடர்படுகின்ற ஒரு தொகை மாணவர் கூட்டம் வளர்ந்துவரும் நிலை தற்காலத்தில் காணப்படுகின்றது, மாணவர்களின் பயிற்சிக் கொப்பிகளை பார்த்தால் எழுத்துப் பிழைகள் மலிந்து ஒலி பேதங்கள் பிறழ்ந்து காணப்படுகின்றன. பாடசாலையில் நூலகர் இன்மை, நூலகரை வேறு பாடத்திற்கு பயன்படுத்துதல், நூலகம் அமைந்துள்ள இடம், பொருத்தமற்ற தன்மை போன்றன சுயகற்றலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.மாணவர்களின் வாசிப்புத்திறனில் பின்தங்கிய நிலையானது சுயகற்றலை பாதித்தல், பெறுபேற்றில் வீழ்ச்சியை ஏற்படுத்தல் போன்ற விளைவுகளை மாணவர் மீது

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2021, IRJTSR 

ஏற்படுத்தியுள்ளது. மாணவர்கள் பொழுதுபோக்கு, விளையாட்டு, பகுதிநேர தொடர்பு சாதனங்கள் மீது கவரப்பட்டிருப்பதன் காரணமாக மாணவர்கள் மத்தியில் சுயகற்றல் முயற்சி குறைந்து காணப்படுகின்றது போன்றவாறான ஆய்வுமுடிவுகள் இன்றைய மாணவ சமுதாயத்தின் கற்றல் மேம்பாட்டிற்கு சுயகற்றலின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றன.

மாணவர்களிடம் வாசிப்புப் பழக்கம், குறிப்பெடுத்துக் கற்றல், அட்டவணை தயாரித்து கற்றல், இணையத்தில் தேடிக்கற்றல் போன்றனவும் திருப்தியற்றுள்ளது. சமூக வலைத்தளங்கள் மீதாக மாணவர்கள் கவரப்பட்டு சுயகற்றலுக்கு நேரம் ஒதுக்காத நிலை ஆய்வுப் பிரதேச மாணவர்களின் சுயகற்றலை நிலை குலையச் செய்துள்ளதோடு பாடசாலை விட்டு வந்ததும் பிரத்தியேக வகுப்புகளுக்குச் சென்று ஓய்வின்றி செயற்படுவதால் மாணவர்கள் மிகவும் களைப்படைந்து சுயகற்றலை மேற்கொள்வதில் பின்தங்கும் நிலையையும் அவதானிக்க முடிகிறது. மாணவர்களிடம் சுயகற்றலை செம்மையாக ஏற்படுத்துவது மிக சவாலான விடயம் எனுமளவிற்கு இன்றைய நிலைப்பாடுள்ளமையினால் மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் சுயகற்றல் பெறும் முக்கியத்துவத்தை கண்டறிந்து உரிய தீர்வுகளை முன்வைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

### 1.2 ஆய்வுப் பிரச்சினை

மண்முனை வடக்கு கோட்ட ஆசிரியர்களின் கருத்துக்கள்,கல்விப்புலம் சார்ந்தோரின் விளக்கங்கள், அண்மைக்கால கல்விப் போக்குகள் மீதான அவதானம் போன்றனவும் மாணவர்கள் மேலதிக புத்தகம் வாசிப்பதில்லை, சுயமாக படிக்கும் நேரமும் குறைவு, மாணவர்கள் சுயகற்றலுக்கான சந்தர்பங்களில் பொழுதுபோக்கு விடயங்களில் ஈடுபடல், சுயகற்றலை விட ஏனைய விடயங்கள் மாணவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக அமைதல், மாணவரின் வயது நிலை எதிர்கால சிந்தனை பற்றியதாக அமையாமை ஆகியன சுயகற்றலின் அலட்சியப் போக்கினை ஏற்படுத்துகிறது போன்ற முன்னைய ஆய்வு முடிவுகளும் மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் சுயகற்றலின் தேவையை உணர்த்துகின்றன.

ஆய்வுப் பிரதேசத்தில் பாடசாலையில் மாணவர்களுக்கான சுயகற்றல் வாய்ப்புக்கள், சுயகற்றலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் சந்தர்ப்பங்கள் போன்றன மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் செல்வாக்குச் செலுத்துவதால் சுயகற்றலின் முக்கியத்துவம் உணரப்பட வேண்டிய நிலை ஆய்விற்கான முக்கிய பிரச்சனையாகவுள்ளது.மாணவர்கள் சுயகற்றலுக்கு முக்கியத்துவம் வழங்குவதற்கு ஏற்பவே அவர்களால் கல்வியில் உயர் நிலையை பெறக் கூடியதாயுள்ளது. சுயகற்றலை மேற்கொள்ள பாடசாலைகளில் போதிய வளங்கள் கிடைக்காதவிடத்து மாணவர்களுக்கு சுயகற்றல் திறன்கள் குறைவடைவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றது.பாடவிடயங்களை கற்பதில் மட்டுமின்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் சுயகற்றல் அவசியம் என்பதை மாணவர்கள் உணராத நிலையில் சுயகற்றலானது மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

ஆய்வுப் பிரதேசத்தின் வீட்டுச் சூழலிலும் பெற்றார் பிள்ளையின் சுயகற்றலை மேம்படுத்தும் வகையில் வசதிகளை செய்து கொடுக்காமை, பிள்ளையின் சுயகற்றலுக்கான ஊக்குவிப்புகளை வழங்காமை, கற்றலுக்கான உதவிகளை செய்யாதிருக்கின்றமை போன்றவற்றால் பிள்ளையின் கற்றல் பாதிக்கப்படுகின்றது. மாணவர்கள் சுயகற்றலின் முக்கியத்துவத்தை உணராத நிலையில் தமது பாடப் புத்தகங்களை கூட விருப்புடன் வாசித்தறிவதற்கு நேரம் ஒதுக்காதுள்ளதோடு பல்துறை சார் விடயங்களை கற்றல்போன்றவற்றில் பின்தங்கியுள்ளனர். விடயத் தெளிவு பெறல், மீட்டல் பயிற்சிகளை செய்து விளங்கிக்கொள்ளுதல், குறிப்பெடுத்துக் கற்றல் போன்ற செயற்பாடுகள் சுயகற்றலின்

செல்வாக்கில் தங்கியுள்ளமையால் கற்றல் மேம்பாட்டை ஏற்படுத்துவதென்பது சவால் மிக்க செயலாகி பிரச்சினைக்குரியதாகியுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினைக்கூற்று:** மாணவர்களின் கற்றல் செயற்பாடு முன்னேற்றம் மிக்கதாக அமைவதற்கு மாணவர்களிடம் ஆரம்பக்கல்வி தொடக்கம் சுயகற்றலை ஏற்படுத்துவது அவசியமானதொரு விடயமாக அமைகின்றது. சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களிடம் சுயகற்றலின் முக்கியத்துவம் உணரப்படாத நிலையானது அவர்களின் கற்றல் மேம்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

### 1.3 ஆய்வின் நோக்கம்.

**பொது நோக்கம்** : சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களின் சுயகற்றல் அவர்களது கற்றல் மேம்பாட்டில் பெறும் முக்கியத்துவத்தைக் கண்டறிதல்.

**சிறப்பு நோக்கங்கள்**

1. சுயகற்றலில் மாணவர்களுடைய ஈடுபாட்டை இனங்காணல்.
2. சுயகற்றலில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணங்களைக் கண்டறிதல்.
3. சுயகற்றல் குறைவடையும் போது கற்றல் மேம்பாட்டில் ஏற்படும் பாதிப்புக்களை ஆராய்தல்.
4. கற்றல் மேம்பாட்டை அதிகரிக்கும் வகையில் சுயகற்றலை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முன்வைத்தல்.

### 2.0 இலக்கிய மீளாய்வு.

சுயகற்றல் என்பது தனிநபர்கள் அவர்களுடைய கற்றல் தேவைகளை அவர்களே கண்டறிதல், கற்றல் குறிக்கோள்களை உருவாக்குதல், கற்றலுக்கான மனித மற்றும் பொருள் வளங்களை சேகரித்தல்,தன் கற்றல் விளைவுகளை மதிப்பீடு செய்வதில் முன்முயற்சி எடுக்கும் ஒரு செயல்முறை என வரையறுக்கப்படுகின்றது(Knowles,1975). மாணவர்கள் அதிக பிழை செய்யும் கூறுகள் ஒவ்வொன்றையும் திருத்துவதற்கு சுயகற்றல் செயற்பாடு தேவை(Ramaiya, 1987).மாணவரிடத்தில் தாழ் அடைவுகளை ஏற்படுத்தக்கூடிய பின்னணி காரணிகளில் ஒன்றாக மாணவர்களின் சுயகற்றல் ஆர்வமின்மை அமைகிறது (ஜெயராசா,1990). மாணவர்கள் சுயகற்றலின் திறன்களை கொண்டிருப்பது அவசியமாகின்றது, சுயகற்றலில் ஈடுபடுபவர்கள் சுதந்திரமாக தங்கள் கற்றல் அனுபவங்களை திட்டமிடுகின்றனர், திட்டங்களை சுயமாக செயல்படுத்துகின்றனர், மற்றும் தம் சொந்த கற்றல் அனுபவங்களை மதிப்பிடுகின்றனர் (Caffarella, 2000).

சுயகற்றலின் வெளிப்பாடு மாணவரின் கல்வி அடைவு மட்டத்தை வெளிப்படுத்துவதாய் அமையும் (ஒஸ்வெல்ட், 2007).இன்றைய டிஜிட்டல் உலகில் மாணவர்களின் அனுபவங்கள் தொழிநுட்ப வடிவமைப்பினால் வரையறுக்கப்படுகின்றன. இது வயதுவந்த மாணவர்களின் சமூக கலாசாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இது பிள்ளைகளின் சுய உணர்விலும் சுயகற்றலிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது (Tyler and Sasha,2008).ஊடகங்களில் வெளியிடப்படும் பொருத்தமற்ற நிகழ்ச்சிகள், தரம் குறைவான திரைப்படங்கள், பொருத்தமற்ற இணையத் தளங்கள் மாணவர்களின் கற்றலை அதிகமாக பாதிக்கின்றது (லோகேஸ்வரன், 2008)கற்பவரின் சாதனையில் குறிப்பிடத்தக்க அளவு சுயகற்றல் நுட்பம் தாக்கம் செலுத்துகிறது(Laila and Ahmad saleem,2009).

கற்றல், சுயகல்வி என்பன தனிமனித வாழ்விலும் தேவையான திறன்களை விருத்தி செய்வதிலும் இன்றியமையாதவையாக உள்ளன(Alina Gil (2015).மாணவரின் கற்றலை

மேம்படுத்துவதற்கு சுய இயக்கிய கற்றல் தயார் நிலை, சுய செயல்திறன்,கல்வி ஊக்குவிப்பு அவசியமானவை,இவ்வுத்திகளை மாணவர்களுக்கு கற்பித்தலும் அவசியமானது (Nasim and Tahere, 2016). மாணவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் சுய இயக்கிய கற்றலின் செயல்திறனை மேம்படுத்தலாம் (John leddo andBhavya, 2017). மாணவர்களின் உடற்கல்வி மீதான அணுகுமுறை மாறிவிட்டது. உடற்கல்வி செயன்முறையின் செயல்திறனை மேம்படுத்த சுயகற்றல் தேவையை முன்னுரிமைப்படுத்தும் ரீதியில் பாடத்திட்டம் அமைய வேண்டும்(Nikolay and Anastasia, 2020).

### 3.0 ஆய்வு முறையியல்

“சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் சுயகற்றலின் முக்கியத்துவம்.” எனும் தலைப்பிலமைந்த இவ்வாய்வானது நிகழ்கால உண்மை நிலைகளை ஆராய்ந்து சரியான முடிவுகளை அளிக்கும் வகையில் அளவை நிலை ஆய்வு முறையிலமைந்த ஓர் ஆய்வாக அமைகின்றது. ஆய்வுப் பிரச்சனையை கண்டறிந்து பிரச்சினை தொடர்பான முன்னைய அறிவைப் பெற இலக்கிய மீளாய்வு செய்யப்பட்டதையடுத்து ஆய்வின் பொது நோக்கம், சிறப்பு நோக்கங்கள் இனங்காணப்பட்டு ஆய்வுப் பிரதேசம், குடித்தொகை பற்றிய விபரங்கள் பெறப்பட்டு அதன் பின் மாதிரித் தெரிவு செய்யப்பட்டது.

ஆய்வுக்கான தரவுகளை சேகரிப்பதற்காக வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் ஆகிய ஆய்வுக் கருவிகள் தயாரிக்கப்பட்டன. வினாக்கொத்து வாயிலாக ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்தும், நேர்காணல் வாயிலாக அதிபர்கள், பெற்றோர்களிடமிருந்தும் அவதானத்தின் வாயிலாக பாடசாலைச் சூழலும் அவதானித்திற்குட்படுத்தப்பட்டு ஆய்வுக்கான தரவு சேகரிக்கப்பட்டது. அத்துடன் ஆய்வில் அளவு, பண்பு ரீதியாக அமைந்த கலப்பு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. புறவயத் தன்மையுடையதாக ஆய்வு முன்னெடுக்கப்பட்டு தரவுகளினதும் தகவல்களினதும் நம்பகம், தகுதியை உறுதிப்படுத்தும் வகையில் தரவுப் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபுகள் ஊடாக காட்டப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 3.1 மாதிரித் தெரிவு

ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்ட மண்முனை வடக்கு கோட்டத்திற்குட்பட்ட இடைநிலைப் பிரிவைக் கொண்ட 29 பாடசாலைகளுள் நான்கு 1Cபாடசாலைகள் வசதி மாதிரியின் அடிப்படையில் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டன. இவ் 04 பாடசாலைகளினதும் அதிபர்கள் மாதிரித் தெரிவின்றி நேரடியாக் தெரிவு செய்யப்பட்டனர். 04 பாடசாலைகளிலும் இடைநிலைப் பிரிவிற்கு கற்பிக்கும் ஆசிரியர்களிலிருந்து இலகு எழுமாற்று மாதிரியின் படி 3:1 எனும் விகிதத்தில் 37 ஆசிரியர்களும், சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களிலிருந்து இலகு எழுமாற்று மாதிரியின் மூலம் 4:1 எனும் விகிதத்தில் 90 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அத்தோடு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 90 மாணவர்களின் பெற்றோர்களில் 4:1 எனும் விகிதாசார அடிப்படையில் 22 பெற்றோர்கள் இலகு எழுமாற்று மாதிரியை பயன்படுத்தி மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர்.

### 4.0 தரவுப் பகுப்பாய்வு, வியாக்கியானமும் கலந்துரையாடலும்


ஆய்வு நோக்கத்தினை சிறப்பு நோக்கத்தின் ஊடாக அடைந்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட ஆய்வு வினாக்களுக்கு விடை காணும் வகையில் வினாக்கொத்து. நேர்காணல், அவதானம் வாயிலாக தரவுகள் பெறப்பட்டு இவற்றை பகுப்பாய்வுக்கு உட்படுத்தி முடிவுகளை பெறும் ரீதியில் பகுப்பாய்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

சேகரிக்கப்பட்ட நேர்த்தி, நம்பகம் மிக்க தரவுகள் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவுகள் எண் சார் தகவல்களாக மாற்றப்பட்டு அட்டவணைகள், சலாகை வரைபுகள் வாயிலாக காட்டப்பட்டு, புள்ளி விபரங்களின் வாயிலாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இதற்காக MicroSoft Excelபயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பகுப்பாய்வு செய்த தரவுகளை வியாக்கியானம் செய்துள்ளதோடு பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்ட தகவலுடன் பொருந்துகின்ற ரீதியில் இவ்வாய்வின் இலக்கிய மீளாய்வில் குறிப்பிட்டுள்ள விடயங்களுடன் தொடர்புபடுத்தி கலந்துரையாடல் செய்யப்பட்டுள்ளது.

### 4.1 சுயகற்றலில் மாணவர்களுடைய ஈடுபாடு.

#### 4.1.1 சுயகற்றல் செயற்பாடுகளில் மாணவர்களுடைய ஈடுபாடு.

மாணவர்களிடம் சுயகற்றல் செயற்பாடுகளில் எந்தளவு ஈடுபடுகின்றீர்கள்? என கேட்ட போது 51 மாணவர்கள் குறைவு என கூறினர், இது 57 சதவீதமாகும். ஆசிரியர்களிடம் மாணவர்கள் சுயகற்றல் செயற்பாடுகளில் எந்தளவு ஈடுபடுகின்றனர்? என கேட்ட போது 22 ஆசிரியர்கள் குறைவாக உள்ளதென்றே பதிலளித்துள்ளனர், இது 60 சதவீதமாகும்.




*உரு 4.1 சுயகற்றல் செயற்பாடுகளில் மாணவர்களுடைய ஈடுபாடு.*

அத்துடன் இதே வினாவை அதிபர், பெற்றோரிடம் வினவிய போது 02 அதிபர்கள் குறைவு என பதிலளித்தனர், இது 50 சதவீதமாகும். 11 பெற்றோர்கள் குறைவு என பதிலளித்திருந்தனர், இது 50 சதவீதமாகும். பாடசாலைச் சூழலை அவதானித்ததன் படி மாணவர்கள் சுயகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவது குறைவாகவேயிருந்தது. இதன்படி மாணவர்கள் சுயகற்றல் செயற்பாடுகளில் குறைவாக ஈடுபடுகின்றனர். குறிப்பாக ஆசிரியர்களின் துலங்களின் படி 60 சதவீதம் குறைவாகவுள்ளமை புலனாகின்றது.

மாணவர்கள் சுயகற்றல் செயற்பாடுகளில் குறைவாக ஈடுபடுவதற்கான காரணத்தை இவர்களிடம் வினவிய போது மாணவர்களுக்கு சுயகற்றலில் அலட்சியப்போக்குள்ளது, பொழுதுபோக்கு விடயங்களில் அதிக கவனம் செலுத்தல், சுயகற்றலுக்கான வளங்களின் போதாமை, குடும்ப பிரச்சினைகள், சுயகற்றலை மேற்கொள்வதற்கான சூழல் அமைவு இல்லாமை போன்றவற்றை காரணம் காட்டியிருந்தனர்.




© 2021, IRJTSR 

**4.1.2 மாணவர்களின் நாளாந்த வாசிப்பு**

மாணவர்கள் வாசிப்புச் செயற்பாட்டில் ஈடுபடுவது குறித்து வினவிய போது 54 மாணவர்கள் குறைவு என பதிலளித்திருந்தனர், இது 60 சதவீதமாகும். இதே வினாவிற்கு 23 ஆசிரியர்கள் குறைவு என பதிலளித்திருந்தனர், இது 62 சதவீதமாகும்.


*உரு 4.2 மாணவர்களின் நாளாந்த வாசிப்பு*




அத்துடன் அதிபர்கள், பெற்றோர்களிடமும் இவ்வினாவை கேட்ட போது, 03 அதிபர்கள் குறைவு என பதிலளித்தனர். இது 75 சதவீதமாகவுள்ளது. 10 பெற்றோர்கள் குறைவு என பதிலளித்திருந்தனர், இது 45 சதவீதமாகும். மாணவர்களின் வாசிப்புச் செயற்பாட்டை பாடசாலை நூலகத்திலும், வகுப்பறையிலும் அவதானித்ததன் அடிப்படையில் 04 பாடசாலையிலும் குறைவாகவே இருந்தது, மாணவர்களிடம் வாசிப்பில் ஈடுபடுவதற்கான ஊக்கமும் தென்படவில்லை. இதன்படி மாணவர்கள் நாளாந்தம் வாசிப்பில் ஈடுபடுவது குறைவாகவுள்ளதெனலாம். குறிப்பாக ஆசிரியரின் துலங்களின் படி 62 சதவீதம் குறைவாகவுள்ளமை புலனாகின்றது.

**4.1.3 மாணவர்களின் இணையக் கற்றல்**

*உரு 4.3 மாணவர்களின் இணையக் கற்றல்*




மாணவர்களிடம் நீங்கள் இணையக் கற்றலில் ஈடுபடுகின்றனரா? எனும் வினாவினை கேட்ட போது, 42 மாணவர்கள் மிகக் குறைவு என பதிலளித்திருந்தனர், இது 47 சதவீதமாகும். ஆசிரியர்களிடம் மாணவர்கள் இணையக் கற்றலில் ஈடுபடுகின்றனரா? எனும் வினாவினை கேட்ட போது, 18 ஆசிரியர்கள் மிகக் குறைவு என பதிலளித்திருந்தனர், இது 49 சதவீதமாகும்.

அத்துடன் அதிபர்கள், பெற்றோர்களிடம் இவ்வினாவை கேட்ட போது, அதிபர்களிடமிருந்து குறைவு எனும் பதிலே 100 சதவீதமானதாக அமைந்திருந்தது. 11 பெற்றோர்கள் மிகக்குறைவு என பதிலளித்திருந்தனர், இது 50 சதவீதமாகும்.


இதன்படி மாணவர்கள் மிகக் குறைவாகவே இணையத்தை பயன்படுத்தி சுயகற்றலில் ஈடுபடுகின்றனர் எனலாம். இங்கு ஆசிரியரின் துலங்களின் படி மாணவர்கள் 49 சதவீதம்சுயகற்றலுக்காக இணையக் கற்றலை மேற்கொள்வது மிகக் குறைவாக இருப்பது புலனாகின்றது.

### 4.2 சுயகற்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணங்கள்.

#### 4.2.1 பாடசாலையின் நூலக வசதி.

பாடசாலையில் சுயகற்றலுகான நூலக வசதி எவ்வாறுள்ளது? என கேட்ட போது 46 மாணவர்கள் குறைவு என பதிலளித்திருந்தனர், இது 51 சதவீதமாகும். 20 ஆசிரியர்கள் குறைவு என பதிலளித்திருந்தனர், இது 54 சதவீதமாகும்.

*உரு 4.4பாடசாலையின் நூலக வசதி*





பாடசாலையின் நூலக வசதி குறித்து அதிபர்களிடம் கேட்ட போது ஓரளவே காணப்படுவதாகக் கூறினர். பாடசாலையின் நூலக வசதி குறித்து அவதானித்த போது நூலகத்தில் தளபாடம்,புத்தகங்கள் குறைவாகவே இருந்தன. இரண்டு பாடசாலையில் நூலகப் பொறுப்பாளர் இன்றி ஆசிரியர் ஒருவரின் பொறுப்பிலேயே நூலகம் செயற்பட்டது. இதன்படி பாடசாலையில் சுயகற்றலுகான நூலக வசதி குறைவு எனலாம். குறிப்பாக ஆசிரியரின் துலங்கல்களிற்கேற்ப சுயகற்றலுக்கான நூலக வசதி 54 சதவீதம் குறைவாகவுள்ளமை புலனாகின்றது.

பாடசாலை நூலக வசதி குறைபாடுகளின் இருப்பின் அவற்றை கூறும்படி மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்களிடம் வினவிய போது புத்தகங்களின் போதாமை. நூலகப் பராமரிப்பு போதாமை, தளபாடங்களின் பற்றாக்குறை போன்றவற்றை கூறியிருந்தனர்.

**4.2.2 மாணவர்களின் பொழுதுபோக்கு**

மாணவர்கள் சுயகற்றலை விட பொழுதுபோக்கு விடயங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம் எத்தகையது என கேட்ட போது 38 மாணவர்கள் அதிகம் என பதிலளித்திருந்தனர், இது 42 சதவீதமாகும். அத்துடன் 15 ஆசிரியர்கள் அதிகம் என பதிலளித்திருந்தனர், இது 41 சதவீதமாகும்.

*உரு 4.5 மாணவர்களின் பொழுதுபோக்கு*





இதேவினாவை அதிபர்களிடம் கேட்ட போது 100 சதவீதமான பதில் அதிகம் என்பதாகவே அமைந்தது. மற்றும் மாணவர்கள் சுயமாக கற்பதை விட பொழுதுபோக்கு விடயங்களில் அதிக நேரத்தை செலவிட்டு மகிழவே விரும்புவதாக இவ் அதிபர்கள் கூறியிருந்தனர்.

இதன்படி ஆசிரியர்களுடைய கருத்தும் மாணவர்களுடைய கருத்தும் ஒத்துப்போகும் வகையில் இரு தரப்பினரும் மாணவர்கள் சுயகற்றலை விட பொழுதுபோக்கு விடயங்களில் அதிகம் ஈடுபடுவது புலனாகின்றது. குறிப்பாக ஆசிரியர்களின் கருத்துப்படி மாணவர்கள் சுயகற்றலை விட பொழுதுபோக்கு விடயங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம் 41 சதவீதத்திற்கும் அதிகமாகவுள்ளது.

**4.2.3வீட்டுச் சூழல்**

உங்களுடைய சுயகற்றலுக்கு வீட்டுச் சூழல் எந்தளவிற்கு உதவியாகவுள்ளது? என கேட்ட போது 38 மாணவர்கள் குறைவு என பதிலளித்திருந்தனர், இது 42 சதவீதமாகும்.




*உரு 4.6மாணவர்களின் வீட்டுச் சூழல்*

அதிபர்களிடம் மாணவர்களின் சுயகற்றலுக்கு வீட்டுச் சூழல் எந்தளவிற்கு உதவியாகவுள்ளது? என கேட்ட போது 100 சதவீதமான பதில் குறைவு என்றே அமைந்தது. இவ்வினாவை

பெற்றோர்களிடம் கேட்ட போது 12 பெற்றோர் குறைவாகவே உள்ளது என கூறினர். இது 55 சதவீதமாகும்.


இதன்படி மாணவர்களுடைய வீட்டுச் சூழலானது அவர்களின் சுயகற்றலுக்கு ஓரளவு உதவியாக இருந்தாலும்கூட 42 சதவீதமான மாணவர்களின் வீட்டுச் சூழலின் பங்களிப்பு குறைவாகவேயுள்ளது என்பது புலனாகிறது. இந்நிலைக்கு வீட்டின் அமைதியற்ற சூழ்நிலை, இட வசதி, குடும்ப பிரச்சனைகள் காரணமாகின்றன என குறிப்பிட்டிருந்தனர்.

### 4.3 சுயகற்றல் குறைவடையும் போது மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் ஏற்படும் பாதிப்புக்கள்.

#### 4.3.1 கல்வியில் பின்தங்கல்.

சுயகற்றல் குறைவடைவதானது மாணவர்களின் கல்வியில் பின்தங்கலை ஏற்படுத்துகிறதா?என வினவப்பட்ட போது90 மாணவர்களும் ஆம் என பதிலளித்திருந்தனர், இது 100 சதவீதமாகும். அதே போல 37 ஆசிரியர்களும் ஆம் என பதிலளித்திருந்தனர், இதுவும் 100 சதவீதமாகும்.

*உரு 4.7 கல்வியில் பின்தங்கல்.*




பெற்றோரிடமும் அதிபர்களிடமும் அதே வினாவை வினவிய போது 100 சதவீதமான பதில் ஆம் என அமைந்தது. அத்தோடு அதிபர்கள் மாணவர்களிடம் சுயகற்றல் செயற்பாடுகள் அதிகரிக்கும் போது கல்வியில் முன்னேற்றம் அதிகரிக்கின்றது எனவும் குறிப்பிட்டனர்.


இத் துலங்கல்களின் அடிப்படையில் சுயகற்றல் செயற்பாடுகள் குறைவடையும் போது மாணவர்களின் கல்வி பின்தங்கல் நிலையை பெறுகின்றமை வெளிப்படையாகின்றது. சுயகற்றல் செயற்பாடுகள் குறைவடையும் போது மாணவர்களின் கல்வி பின்தங்கல் நிலையை பெறுகின்றமை 100 சதவீதம் உறுதியாகின்றது.

#### 4.3.2 இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஏற்படும் பாதிப்புக்கள்

மாணவர்களிடம் உங்களுடைய சுயகற்றல் செயற்பாடுகள் குறையும் போது இணைப்பாடவிதான

செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றதா?என வினவிய போது 75 மாணவர்கள் ஆம் என பதிலளித்திருந்தனர், இது 83 சதவீதமாகும். ஆசிரியர்களிடம் மாணவர்களின் சுயகற்றல் செயற்பாடுகள் குறையும் போது இணைப்பாடவிதான செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றதா? என வினவிய போது 32 ஆசிரியர்கள் ஆம் என பதிலளித்திருந்தனர், இது 86 சதவீதமாகும்.

*உரு 4.8இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஏற்படும் பாதிப்பு*





அதிபர்களும் பெற்றோரும் இவ்வினாவிற்கு ஆம் என்றே பதிலளித்திருந்தனர். இது 100 சதவீதமாகவுள்ளது. இதன்படி மாணவர்களிடம் சுயகற்றல் செயற்பாடுகள் குறையும் போது இணைப்பாடவிதான செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றமை வெளிப்படையாகின்றது. குறிப்பாக ஆசிரியரின் துலங்களின் படி இது 86 சதவீதமாக உள்ளது.

## 4.4 கற்றல் மேம்பாட்டை அதிகரிக்கும் வகையில் சுயகற்றலை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும்.

### 4.4.1 மாணவரின் சுயகற்றல் பிரச்சினையை தீர்க்க ஆசிரியர் உதவுதல்.

மாணவரின் சுயகற்றல் பிரச்சனையை தீர்க்க ஆசிரியர் உதவுகின்றனரா? எனும் வினாவிற்கு 63 மாணவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என பதிலளித்திருந்தனர், இது 70 சதவீதமாகும். 29 ஆசிரியர்கள் ஓரளவு ஏற்கிறேன் என பதிலளித்திருந்தனர், இது 78 சதவீதமாகும்.





*உரு 4.9 மாணவரின் சுயகற்றல் பிரச்சனையை தீர்க்க ஆசிரியர் உதவுதல்.*

இதே தவினாவை அதிபரிடம் வினவிய போது, 100 சதவீதமாக பதிலும் ஓரளவென்பதாகவே அமைந்தது. ஆசிரியர் சுயகற்றல் குறித்து ஆலோசனை வழங்குதல், சுயகற்றலில் மாணவனுக்கு உள்ள தடைகளை இனங்கண்டு இழிவளவாக்குதல் போன்றவற்றை ஒரு சில ஆசிரியர்களே மேற்கொள்வதாக அதிபர்கள் கூறியிருந்தனர். இதன்படி மாணவரின் சுயகற்றல் பிரச்சனையை தீர்க்க ஆசிரியர்கள் உதவுவதாக ஆசிரியர்கள் ஓரளவு ஏற்றுக்கொண்டாலும் கூட மாணவர்களில் 70 சதவீதமானோர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது வெளிப்படையாகின்றது.

**4.4.2 மாணவர்கள் வாசிப்பை அதிகரிப்பதற்கான செயற்பாடுகளைச் செய்தல்.**

மாணவர்கள் வாசிப்பு பழக்கத்தை அதிகரிப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை குறித்து 44 மாணவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என துலங்கியிருந்தனர், இது 49 சதவீதமாகும். 18 ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என துலங்கியிருந்தனர், இது 49 சதவீதமாகும்.





*உரு 4.10 மாணவர்கள் வாசிப்பை அதிகரிப்பதற்கான செயற்பாடுகளைச் செய்தல்.*

அதிபர், பெற்றோரிடம் இவ்வினாவை வினவிய போது 18 பெற்றோர் குறைவாக உள்ளதாக கூறினர், இது 82 சதவீதமாகும். மற்றும் 100 சதவீதமான அதிபர்களும் குறைவு என கூறியதோடு அதை அதிகரிப்பதற்கான முயற்சிகள் செய்யப்பட வேண்டும், மாணவர்களிடம் வாசிப்பு செயற்பாடுகளுக்கான முயற்சிகள் குறைவாகவேயுள்ளது எனவும் தெரிவித்தனர்.

இதன்படி ஆசிரியர்களும், மாணவர்களும் ஒருமித்த கருத்தை கொண்டுள்ளனர். அதாவது மாணவர்கள் வாசிப்பு பழக்கத்தை அதிகரிப்பதற்கான செயற்பாடுகளைச் செய்வதாக 49 சதவீதம் ஏற்றுக்கொள்ளவில்லை.

**4.5.6 சுயகற்றலுக்காக பெற்றோரின் ஊக்குவிப்பு கிடைத்தல்.**




*உரு 4.11 சுயகற்றலுக்காக பெற்றோரின் ஊக்குவிப்பு கிடைத்தல்*

சுயகற்றலுக்காக பெற்றோரின் ஊக்குவிப்பு கிடைக்கின்றமை குறித்து 53 மாணவர்கள் ஏற்கவில்லை என துலங்கியிருந்தனர், இது 60 சதவீதமாகும். மற்றும் 27 ஆசிரியர்கள் ஏற்கவில்லை என துலங்கியிருந்தனர், இது 73 சதவீதமாகும்.அதே போல 4 அதிபர்களும் குறைவாகவே உள்ளதென கூறியிருந்தனர். இது 100 சதவீதமாகும். இத் துலங்கல்களை

ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது மாணவரின் சுயகற்றலுக்காக 60 சதவீதத்திற்கும் அதிகமான பெற்றோருடைய ஊக்குவிப்பு கிடைக்கவில்லை எனலாம்.

**5.0 முடிவுகளும் விதப்புரைகளும்.**

**5.1 சுயகற்றலில் மாணவர்களுடைய ஈடுபாடு**
**முடிவுகள்**

1. சுயகற்றல் செயற்பாடுகளில் மாணவர்களுடைய ஈடுபாடு 60 சதவீதம் குறைவாகக் காணப்படுகின்றது.

2.மாணவர்கள் சுயகற்றலை விட பொழுதுபோக்கு விடயங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம் 41 சதவீதத்திற்கும் அதிகமாகவுள்ளது.

3. மாணவர்கள் 49 சதவீதம்சுயகற்றலுக்காக இணையத்தை பயன்படுத்துவது மிகக் குறைவாகவுள்ளது.

**விதப்புரைகள்**

1.ஆரம்பக் கல்வி முதலாக சுயகற்றல் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடச் செய்ய வேண்டும்.

2. சுயகற்றலில் ஆர்வத்தை தூண்டும் வகையில் சுயகற்றலில் ஈடுபடுவதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து மாணவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

3. இன்றைய காலகட்டத்தில் இணையத்தின் வாயிலான சுயகற்றல் முக்கியத்துவமுடையது என்பதை விழிப்புணர்வுச் செயற்பாட்டின் ஊடாக பெற்றோருக்கும் மாணவருக்கும் பாடசாலைச் சமூகம் தெளிவுபடுத்த வேண்டும்.

**5.2 சுயகற்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணங்கள்**
**முடிவுகள்**

1. பாடசாலையில் சுயகற்றலில் ஈடுபடுவதற்கான நூலக வசதி 54 சதவீதத்திற்கும் குறைவான நிலையில் உள்ளது.

2. மாணவர்கள் சுயகற்றலை விட பொழுதுபோக்கு விடயங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவம் 41 சதவீதத்திற்கும் அதிகமாகவுள்ளது.

3. 42 சதவீதமான மாணவர்களின் வீட்டுச்சூழல் அவர்களுடைய சுயகற்றலுக்கு குறைவான பங்களிப்பைச் செய்கின்றது.

**விதப்புரைகள்**

1. மாணவர்களிடம் வாசிப்பை அதிகரித்து சுயகற்றலில் நாட்டத்தை ஏற்படுத்தும் வகையில் பாடசாலையின் நூலகச் செயற்பாடுகளை மாணவரை கவரக்கூடியதாக அமைப்பதோடு,வகுப்பறை நூலகங்கங்களையும் அமைத்தல் வேண்டும்.

2. மாணவர்கள் சுயகற்றல் செயற்பாடுகளை முறையாக திட்டமிட்டுச் செய்ய வேண்டும்.



© 2021, IRJTSR 

3. கற்பதற்குரிய இடவசதி, வளம், அமைதியான சூழல் போன்றவற்றை ஏற்படுத்தி வீட்டுச் சூழலை மாணவர்களின் சுயகற்றலுக்கு ஏற்றதாக மாற்றி வடிவமைத்துக் கொடுப்பதில் பெற்றோர் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

### 5.3 சுயகற்றல் குறைவடையும் போது மாணவர்களின் கற்றல் மேம்பாட்டில் ஏற்படும் பாதிப்புக்கள்.

**முடிவுகள்**

1. சுயகற்றல் குறைவடையும் போது மாணவர்களிடம் கல்வியில் பின்தங்கும் நிலை ஏற்படுகின்றமை 100 சதவீதம் உறுதியாகின்றது.

2. மாணவர்களின் சுயகற்றல் செயற்பாடுகள் குறையும் போது இணைப்பாடவிதான செயற்பாடுகளில் 86 சதவீதம் பாதிப்பு ஏற்படுகின்றது.

**விதப்புரைகள்**

1. மாணவர்கள் தம் பாட அடைவை, தவணைப் பரீட்சைப் புள்ளிகளை உயர்த்தும் நோக்கில் சுயகற்றலில் ஆர்வத்துடன் தினந்தோறும் ஈடுபட வேண்டும்.

2. மேலதிக பயிற்சி, மீண்டும் மீண்டும் பயிற்சி செய்தல் வாயிலாக இணைப்பாடவிதானத்தில் சுயகற்றலை அதிகரிக்க வேண்டும்.

### 5.4 கற்றல் மேம்பாட்டை அதிகரிக்கும் வகையில் சுயகற்றலை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும்.

**முடிவுகள்**

1. மாணவரின் சுயகற்றல் பிரச்சினையை தீர்க்க ஆசிரியர் உதவும் செயற்பாடு 70 சதவீதம் போதுமானதாக இடம்பெறவில்லை.

2.மாணவரிடம் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் 49 சதவீதம் இடம்பெறவில்லை.

3. 60 சதவீதத்திற்கும் அதிகமாக பெற்றோரின் ஊக்குவிப்பு சுயகற்றலுக்காக கிடைக்கவில்லை.

**விதப்புரைகள்**

1. கற்றல் மேம்பாட்டை அதிகரிக்கும் வகையில் சுயகற்றலை மேற்கொள்ளச் செய்வதற்காக மாணவர்களுக்கு எழும் சுயகற்றல் பிரச்சினைகள் குறித்து ஆசிரியர்கள் மாணவர்களிடம் கேட்டறிந்து அவற்றை தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

2. மாணவரிடம் வாசிப்பு பழக்கத்தை அதிகரிப்பதற்கு பாடசாலையில் வாசிப்பு, கட்டுரைப் போட்டிகள் போன்றவற்றை நிகழ்த்தி வெற்றிபெறுவோருக்கு பரிசில்களும் பாராட்டும் வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.

3. பெற்றோர் பிள்ளையின் சுயகற்றலை ஊக்குவிப்பதற்கு முழு முயற்சி எடுத்தல் வேண்டும்.



© 2021, IRJTSR

## உசாத்துணைகள்.

[1] ஒஸ்வெல்ட், வி.ஆர்.எ. 2007. **விளைதிறன் மிக்க கற்றல்,** அகவிழி சஞ்சிகை, சேமமடு புத்தகசாலை, கொழும்பு 11.

[2] கருணாநிதி, மா. 2008. **கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கான வழிமுறைகள்**, சேமமடு பொத்தகசாலை, கொழும்பு – 11.

[3] கலாமணி, த. 2011. **சுயகற்றல் திறன்களை மேம்படுத்தல்**, ஆசிரியம், சேமமடு பதிப்பகம்,கொழும்பு.

[4] மன்சூர்,எஸ்.எல். 2012. **வாசிப்பின் அவசியம்,**Jaffna Muslim web site.

[5] லோகேஸ்வரன், ஆர். 2008. **கற்றலை பாதிக்கும் காரணிகளும் ஆசிரியரும்**, அகவிழி சஞ்சிகை, விழி 4, சேமமடு புத்தகசாலை, கொழும்பு 11.

[6] ஜெயராசா, சபா. 1990. **மாணவர்களின் அடைவு பற்றிய மீளாய்வு,**அகவிழி சஞ்சிகை, விழி 3, டொரிங்டன் அவனியு கொழும்பு 7.

[7] Alina Gil., 2015. **The Role of the internet in self-study,** Jan Dlugosz University Czestochowa, Poland.

[8] Caffarella,R.S., 2000. **Goals of Self-Learning, Conceptions of self-directed learning: Theoretical and conceptual considerations,** waxmann, Munster, Germany, p:37-48

[9] John leddo, Bhavya Boddu., et-al. 2017.**The effectiveness of self-directed learning vs. teacher-led learning on gifted andtalnded vs. non-gifted and talended students.**International Journal of Advanced Educational Reserch: MyEdMaster, sunrise Valley drive, Herndon, VA, USA.

[10] Knowles, M., 1975.**Self-directed learning: A guide for leraners and teachers**, New York: Association press.

[11] Laila Mohamad, Ahmad Saleem., 2009. **The Impact of Self -Learning Strategy on the Learners' Achievement in Public Secondary Schools**, An- Najah National University, Nablus, Palestine.

[12] Marie lall., 2010. **Child centerd learning and teaching aproches in Myanmar,** London

[13] Nasim saeid and Tahere, E., 2016. **Relationship between Student's Self-Directed-Learning Readiness and Academic Self-Efficacy and Achievement Motivation in Students**,Payamnoor University, Tehran, Iran.

[14] Nikolay BVorobyov, Anastasia V Stafeeva., 2020. **Organizational and Methodological Support for the Formation of the Need for Self-Learning by Physical Education,** International Journal of applied Exercise Physiology 9 (8), p:26 -32

[15] Ramaiya., 1987. **lingustie difficulties encounterre secondary for Tamil students in their Tamil compositions**, Singapore National University

[16] Tyler Dodge, Sasha Barab, et-al., 2008. **Children's sense of self: Learning and meaning in the digital age**, Journal of Interactive Learning Research 19 (2) p:225 – 249.